செ.வெ.எண்: 11 நாள்: 06.02.2018

**மாண்புமிகு மறைந்த முதலமைச்சர் அம்மா அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள காவலர்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தினார்கள் - மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூரில் புதிய இலுப்பூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (06.02.2018) திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள், மத்திய மண்டல காவல்துறை தலைவர் (திருச்சிராப்பள்ளி) திரு.வி.வரதராஜு இ.கா.ப., அவர்கள், திருச்சி சரக காவல்துறை துணைத் தலைவர் திருமதி.கே.பவானீஸ்வரி இ.கா.ப., அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.செல்வராஜ் அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த புதிய இலுப்பூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்து பேசுகையில் தெரிவித்ததாவது:

இலுப்பூரில் பெரும் முயற்சி எடுத்து தொடர்ந்து சட்டம் ஒழுங்கை சிறப்பாக பராமரிக்கும் வகையில் புதிய இலுப்பூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் பணியிடம் உருவாக்கப்பட்டு அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு மறைந்த முதலமைச்சர் அம்மா அவர்கள் காவல்துறை மீது மிகுந்த மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார்கள். காவல்துறையில் உள்ள காவலர்கள் நலனிற்காக உங்கள் சொந்த இல்லம், காவலர் வீட்டுவசதி வாரிய குடியிருப்பு மூலம் குடியிருப்புகள் கட்டுதல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தினார்கள். முதல் பெண் கமாண்டோ படையையும் உருவாக்கினார்கள். மேலும் இலுப்பூரில் புதிதாக திறக்கப்பட்டுள்ள காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு விரைவில் சொந்த கட்டடம் கட்டப்படும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் இலுப்பூர் காவல் துணை கண்காணிப்பாளர் திரு.எஸ்.கோபாலச்சந்தரன், இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.ஜெயபாரதி, கூட்டுறவு சங்கத் தலைவர் திரு.வி.ராமசாமி, ஆத்மா குழுத்தலைவர் திரு.பி.சாம்பசிவம், இலுப்பூர் பேரூராட்சி முன்னாள் தலைவர் திரு.குருபாபு, காவல்துறை ஆய்வாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**